
திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்
செப்டம்பர் 2020

ஸப்தகிரி இலவச இணைப்பு



செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா!

- குலசேகராழ்வார்



ஜகடபு சநுவுல ஜாஜர... ஸகிநல மஞ்சபு ஜாஜர...
- அன்னமய்யா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



ஸப்தகிரி இலவச இணைப்பு

செப்டம்பர் 2020

மலர் – 01 இதழ் – 07

உள்ளுறை | பக்கம்

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| இந்துக்கடவுள்கள் : ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் - திருமதி. டி.எஸ். ராஜலஷ்மி, கேரளா. | 04 |
| பன்னிரு ஆழ்வார்கள் : குலசேகராழ்வார் - திரு. கே. ராமநாதன், சேலம். | 06 |
| கன்னட ஹரிதாஸர்கள் : ஸ்ரீவிஜய தாசர் - திருமதி வி. உஷா, திருப்பதி. | 08 |
| சித்திரக்கதை : தும்புரு தீர்த்தம் கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு. தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ். சித்திரம் : திரு. பி. சிவபிரசாத். | 10 |
| நீதிக்கதைகள் : கடவுளை நம்பினோர் கைவிடப்படார்! - திரு. சத்யதாரா, சென்னை. | 14 |
| சிறந்த சிறுவன் : செல்வன் ஜ.ஸ்ரீசரன் | 16 |
| புதிர் : வினா–விடை - திரு.என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர். | 17 |
| சித்திரம் வரைதல் | 18 |

முன்னட்டை : திருவேங்கடமுடையான் மூலவர்
பின்னட்டை : அன்னமய்யாவும் ஆனந்த நிலையானும்



# ஸ்ரீநிவாச திருக்கல்யாணம்

– திருமதி ராஜலட்சுமி,
கேரளா.

கஷ்யப மஹரிஷி முன்னிலையில் யாகத்திற்கு பிரதான தெய்வம் யார் என்ற கேள்வி எழுந்தது. ப்ருகு முனிவர் அதையறிய சத்ய லோகம் மற்றும் கைலாயம் சென்றார். அங்கு யாரும் இவரை கவனிக்கவில்லை. இறுதியாக ஸ்ரீவைகுண்டத்திற்குச் சென்றார். ஸ்ரீவைகுண்டத்தில் விஷ்ணுவும் இவரை கவனிக்காததால் அவரின் மார்பில் எட்டி உதைத்தார். ஆனால் விஷ்ணு அவரை சமாதானப்படுத்தி தானே பிரதான தெய்வமானார். ஸ்வாமியின் மார்பை ரிஷி உதைத்ததால் கோபம் அடைந்த லக்ஷ்மி தேவி ஸ்ரீவைகுண்டம் விடுத்து பூலோகம் சென்றார். பகவான் லக்ஷ்மி தேவியை தேடி, பூலோகத்தில் உள்ள திருமலையில் வந்து இறங்கினார். வகுள மாதாவின் வளர்ப்பு மகனாக ஸ்ரீநிவாசனாக ஆனார்.

அதே சமயம், ஆகாசராஜனும் யாகத்திற்காக நிலத்தை தோண்டும் போது, ஸ்ரீபத்மாவதி சிறு குழந்தையாகக் கிடைத்தார். பத்மாவதி திருமண வயதை எட்டியபோது, தன் தோழிகளுடன் தோட்டத்திற்குச் சென்றார். அங்கே ஒரு யானை துரத்த பயந்து ஓடினாள். அப்பொழுது அங்கே ஸ்ரீநிவாசன் வந்து யானையை விரட்ட, ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசனின் வீரத்தையும் அழகையும் கண்டு மயங்க, ஸ்ரீநிவாசனும் ஸ்ரீபத்மாவதியைக் கண்டு மயங்கினார். பிறகு ஸ்ரீநிவாசன் வகுளமாதாவிடம் நடந்தனவற்றை கூறி, ஸ்ரீபத்மாவதியை பெண் கேட்கும்படி கூறினார். வகுளமாதாவோ சற்று தயங்கினாள். ஸ்ரீநிவாசர்

நம்பிக்கை கொடுத்து வேண்டினார். வகுள மாதா மன்னரின் அரண்மனைக்குச் சென்றார்.

இதற்கிடையே அரண்மனையில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசனை நினைத்துக் கொண்டு இருப்பதை கண்டு மன்னனும் கவலைக் கொண்டான். அதே சமயம் ஸ்ரீநிவாசன் குறத்தி வேடம் பூண்டு அரண்மனைக்குச் சென்றார். அங்கு ஸ்ரீபத்மாவதியின் கை ரேகையை பார்த்து, மகாவிஷ்ணுவின் அம்சமான ஸ்ரீநிவாசனுக்கு நீர் மனைவி ஆவீர் என்றார். அப்போது வகுள மாதா மன்னரிடம் ஸ்ரீநிவாசனுக்கு பெண் கேட்டு வந்தார். மன்னரும் மகிழ்ச்சியுற்று சம்மதம் தெரிவித்தார்.

திருக்கல்யாணத்தைக் காண எல்லா தேவர்களும் பூலோகத்திற்கு வந்தனர். திருமணம் அரச குமரியோடு என்பதால், ஸ்ரீநிவாசனும் அதற்கு சமமாக தாமும் திருக்கல்யாண ஏற்பாடுகளைச் செய்ய குபேரனிடம் பல லட்சம் தனம் கடனாகப் பெற்றார். அனை வரும் திருக்கல்யாணத்தைக் காண ஆகாசராஜன் ஏற்பாடு செய்த மண்டபத்திற்கு வந்தனர். பூலோகம், தேவலோகம், சத்யலோகம், கைலாயம், ஸ்ரீவைகுண்டம் போல் காட்சியளித்தது.

வாரணமாயிரம் சூழ மணமகனான ஸ்ரீநிவாசன் அழகாகக் காட்சியளித்தார். புவனபுத்ரியாக ஸ்ரீபத்மாவதி தாயார் விளங்கி னாள். திருக்கல்யாணம் மிக மிக அற்புதமாக நடந்தேறியது. திவ்ய தம்பதியர் இருவரும் இவ்வுலகைக் காக்கவே திருக்கல்யாணம் நடை பெற்றதாக கூறுவர்.




# குலசேகர ஆழ்வார்

திருவஞ்சிக்களம் என்ற ஊரில் சேரமன்னரும் சந்திரகுலத்தவருமான திடவிரதருக்கு மகனாகப்பிறந்த இவர் விஷ்ணுவின் மீது மாறாத பக்தி கொண்டு விளங்கினார். சேரர் குலம் செழிக்கப்பிறந்தவர் என்பதால் பெற்றோர் இவருக்கு குலசேகரர் என்றே பெயரிட்டனர். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 10 ஆம் நுற்றாண்டின் முற்பகுதியாகும். நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் இவர் பாடிய 105 பாடல்கள் பெருமாள் திருமொழி என அழைக்கப்படுகின்றன. இப்பாடல்களில் இராமாவதார கிருஷ்ணாவதாரப் பாடல்களே அதிகம் எனலாம். இவர் பாடிய பாடல்கள் யாவும் பருகுவதற்கு இன்னமுது. பாவம் போக்கும் நன்மருந்தாகும்.

அரசக் குடும்பத்தில் பிறந்தாலும் மாலவன் சேவையில் மனம் ஈடுபாடு கொண்டிருந்த குலசேகரர் விஷ்ணுவின் அடியவர்கள் சூழவே இருந்து வந்தார். அரசர் அடியவர்களுடன் இருப்பதை விரும்பாத அமைச்சர்கள் ஒரு திட்டம் தீட்டினர். அதன்படி அரசர் நாளும் வணங்கும் விஷ்ணுவின் திருவாபரணப் பெட்டியில் இருந்த அழகிய நவரத்ன மாலையை எடுத்து மறைத்து வைத்து அடியவர்களில் யாரோ ஒருவர் அதை களவாடியதாக அரசரிடம் கூறி வைத்தனர். அடியவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் குடத்தில் கை



விட்டு மீள வேண்டும் என்று கூறினர். இதைக் கேட்ட குல சேகரர் பரன் அன்பர் கொள் ளார் என்று கூறி தானே குடத்தில் கைவிட்டு மீண்டார். இதைக் கண்ட அமைச்சர்கள் தம் செயலுக்கு மனம் வருந்தி மாலையை திரும்பக் கொடுத் தனர். அடியாரை மதிக்காத நிலைக்கண்டு வருந்திய குல சேகரர் தன் மகனுக்கு முடிசூட்டிய பின்னர் வைணவத் தலங்களுக்குச் சென்று திருமாலைக் கண்டு வணங்கி மனமுருகிப் பாடி மகிழ்ந்தார்.



திருவேங்கடத்தான் மீது இவர் பாடியுள்ள திருமொழி, கவிதை நயம் மிக்கவை. திருமால் எழுந்தருளியிருக்கும் திருமலை திருத்தலத்தில் மீனாகவோ, மரமாகவோ, செடியாகவோ, பறவையாகவோ அல்லது ஏதாவது ஒன்றாகவோ பிறக்க விரும்பிய இவர், அத்திருமலையில் படியாய் கிடந்தால் அவன் பவளவாய் கண்டு மகிழ்வேன் என்று விரும்பினார். இவரது விருப்பத்திற்கேற்ப திருமலையிலும், திருவரங் கத்திலும் திருமாலின் அருகில் உள்ள படி "குலசேகரப்படி" என்றே அழைக்கப்படுகிறது.

குலசேகரர் தன் மகளான சேரர்குல வல்லியை திருவரங்கப் பெருமானுக்கு திருமணம் செய்து வைத்தார். திருமாலின் மார்பில் இருக்கும் மணியான கௌஸ்துபம் அம்சத்தைப் பெற்றவராகிய இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திலுள்ள மன்னார் கோயிலில் முக்தியடைந்தார்.

– திரு. கே. ராமநாதன்,
சேலம்.

கன்னட ஹரிதாசர்கள்



# ஸ்ரீவிஜய தாசர்



ஸ்ரீ விஜயதாசர், ஸ்ரீபுரந்தரதாசரின் சீடர். ஹரியின் மதியையும் ஹரிபக்தர்களின் மதியையும் எவ்வாறு பெற முடியும் என்பதை அறிந்தவர். ஆதலால், இவரை விஜயதாசர் என்று அழைத்தனர்.

இவர் ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள மான்வி தாலுக்காவில், சீகலபரி என்ற (பகுதியில்) இடத்தில் ஏழை பிராமணர் வீட்டில் பிறந்தார். இவருடைய பெற்றோர் சீனிவாசப்பா மற்றும் கூசம்மா. சிறு வயதிலேயே இவர் (வாரணாசிக்குச்) காசிக்குச் சென்று 4 ஆண்டுகள் தம் வித்யாப்யாசத்தை முடித்து பின் ராய்ச்சூர் திரும்பினார். இவருக்கு 16 ஆம் வயதில் ஆரளம்மா என்ற பெண்ணுடன் திருமணம் நடைபெற்றது. வறுமையின் காரணமாக, பல இன்னல்களை அநுபவித்தனர். தன் பெற்றோர்களின் மரணத்திற்குப் பின் மறுபடியும் வாரணாசிக்குச் சென்று தன் படிப்பைத் தொடர்ந்தார். சமஸ்கிருதத்தில் பெரும் பண்டிதர் ஆனார். ஒரு நாள் அவரின் கனவில் ஸ்ரீ புரந்தரதாசர் தோன்றி, தன்னை ஹரிதாசர் ஆக மாற்றினார் என்றும், அன்று முதல் தான் விஜயதாசராக பெயர் மாற்றிக்கொண்டார் என்றும் தெரிவித்தார். இவரது கீர்த்தனைகள் அனைத்தும் “விஜய விட்டலா” என்ற நாமத்துடன் முடிவடையும். இவரது கீர்த்தனைகளுக்கு மெய் மறந்து பலபேர் சீடர்களாக மாறினார்கள். அந்த சீடர்களில் ஸ்ரீ ஜகன்னாத தாசர், ஸ்ரீ கோபால தாசர், கல்லூர் சுப்பிர

மணியாசார்யர் ஆகியோர் மிகவும் முக்கியமானவர்கள். ஒவ்வொரு கார்த்திகை மாதம் சுத்த நவமியன்று தசமி உத்தான துவாதசியன்றும் குந்தக்கல்லிற்கு 3.கி.மீ. தூரத்தில் உள்ள சிப்பகிரி என்ற இடத்தில் ஸ்ரீ விஜயதாசர் ஆராதனை உத்சவம் நடைபெறும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த உத்சவத்தில் கலந்து கொண்டு தம் பக்தியை வெளிப்படுத்துவர்.

இவருடைய கீர்த்தனைகள் அனைத்தும் ஸ்துதிகள் ஆக பெயர் பெற்றன. இவர் 25,000 பாடல்களை இயற்றினார். புரந்தர தாசரின் கீர்த்தனைகளுக்குப் பிறகு புகழ் பெற்றது இவருடைய கீர்த்தனைகள் இவருக்கு சீடர்கள் பலபேர். விஜயதாசரின் ஹரிபக்தியை மெச்சி "தாசஸ்ரேஷ்டா" என்ற பட்டப் பெயரால் கௌரவிக்கப்பட்டார். தம் வாழ்நாளில் பல அற்புதங்களை வெளிப்படுத்தினார்.

ஒருநாள் ஒரு பெண் தன் குழந்தையுடன் தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது அவர்களைக் காப்பாற்றினார். இவரின் மற்றொரு சீடரான ஸ்ரீ கோபால தாசர் விஜயதாசரின் பிருந்தாவனத்தில் ஆஞ்சநேயஸ்வாமி விக்ரகத்தை பிரதிஷ்டை செய்தார். இந்த பிருந்தாவனத்திற்கு முன் ஒரு தெப்பக்குளம் உள்ளது. ஸ்ரீ விஜயதாசர் அவர்கள் காசியாத்திரை செய்தபோது, தன்னுடன் கங்கா ஜலத்தைக் கொண்டு வந்து இந்த தெப்பக் குளத்தில் கலந்தாராம். ஆகையால் இந்த தீர்த்தத்திற்கு விஜய தீர்த்தம் என்றும், கங்கா ஜலத்திற்கு உள்ள பெருமை (பவித்ரம்) இந்த குளத்திற்கு உள்ளது என்றும் கூறுகின்றனர்.

கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்ற ஸ்ரீவிஜயதாசர் பலவிதமான கீர்த்தனைகளால் ஸ்ரீ ஹரியைப் புகழ்ந்து, புகழ் பெற்ற ஹரிதாசர்களில் ஒருவராக மதிக்கப் பெற்றார்.

**தெலுங்கு மூலம் : திரு.தேசு வேங்கடசுப்பாராவ்.**
**தமிழாக்கம் : திருமதி வி. உஷா.**


# சித்திரக்கதை

# தும்புரு தீர்த்தம்

கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்
சித்திரம் : திரு.பி. சிவபிரசாத்




9 நீ எவ்வாறேனும் நினைத்துக்கொள் அது தவறுதான்!
10 மன்னித்துக் கொள்ளுங்கள் நாரதரே!
11 உன்னை மன்னிக்க இயலாது. அதற்கு தண்டனை அனுப வித்தே தீர வேண்டும்
12 இனி எப்பொழுதும் செய்யமாட்டேன்
13 இன்று முதல் ஆகாய மார்க்கமாகச் செல்லும் உன் சக்தியை போக்குகின்றேன். தலை கீழாக பூமி மீது விழு. அங்கேயே இரு! இதுவே என் சாபம்!
14 தேவரிஷி நாரதரே! மன்னியுங்கள்!
15 உடனே தும்புருவர் ஸ்ரீஹரி கான புண்ணியத்தால் வேங்கடாசலத்தில் கோனை தீர்த்தம் அருகில் விழுந்தார். தும்புருவர் அங்கிருந்த முனிவர்களிடம்...
16 முனிகளே! நான் எங்குள்ளேன்?
17 இது சேஷாசலம். ஸ்ரீஹரி நித்ய வாசம்!
18 முனிவரிடம் நடந்ததைக் கூறினார்
19 முனிவரே! எனக்கான கடமைகளை கூறுங்கள்
20 நீ இங்கே விழுந்தது உன் முன் பிறவியின் பலனே!


21
ஆம்! தாங்கள் கூறுவது உண்மையே! (என்றார் தும்புருவர்)
கந்தர்வரே! எதிரில் உள்ள இத்தீர்த்தத்தில் தினமும் நீராடி திருவேங்கடமுடையானை நோக்கி தவம் செய்! (என்றார் முனி)
22
23
எவ்வளவு காலம் தவம் செய்தல் வேண்டும்?
ஓராண்டு காலம் இத்தீர்த்தத்தில் தவம் செய்யுங்கள். திருவேங்கடமுடையான் தவறாமல் அருள் புரிவார்
24
25
பாப பரிகாரத்திற்காக தாங்கள் கூறியபடி தவம் செய்கிறேன்! நன்றி!

26

தும்புருவரின் கடினமான தவத்திற்கிறங்கி திருவேங்கடமுடையான் தும்புருவர் முன்பாக காட்சியளித்தார். தும்புருவரும் ஸ்வாமியை புகழ்ந்து மதுர கானம் பாடினார்.




அடுத்த இதழில் திருவேங்கடமுடையானின் மற்றொரு திவ்ய திருலீலையை படித்து மகிழலாம்...

முற்றும்.

நீதிக்கதைகள்



# கடவுளை நம்பினோர் கைவிடப்படார்!

- திரு. சத்யதாரா, சென்னை

கடவுளின் மீது சிறிதும் நம்பிக்கை இல்லாத ஒரு பிச்சைக்காரன் இருந்தான். கடவுள் நம்பிக்கை மிகுந்த அந்த ஊர் அரசன் தனது பிறந்த நாளில் யாரும் பசியோடு இருக்கக்கூடாது என்று ஊர் மக்கள் அனைவருக்கும் அன்னதானம் செய்து கொண்டிருந்தான். இறைவன் நாமத்தினை பக்தியுடன் பஜனை பாடிய அனைவருக்கும் விருந்து கிடைத்தது. கடவுள் நம்பிக்கை இல்லாத அந்த பிச்சைக்காரன், பஜனையில் சேராது, அன்னதான கூடத்தில் வரிசையில் காத்து இருந்தான். அனைவரும் அருவருப்புடன் பக்தி இல்லாத அவனை வெறுத்து ஒதுங்கி நின்றனர்.

தம்மை பிடிக்காத பக்தர்களுடன், வரிசையில் நிற்காமல் ஒதுங்கி நின்று, கடைசியில் சென்று உணவு பெற்றுக் கொள்ளலாம் என்று காத்திருந்தான். இறைவன் நாமம் கூறாத அவனை, யாரும் கண்டு கொள்ளவே இல்லை. இறுதியில் உணவு ஏதுவும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பினான்.

மாலையில் ஒரு குளத்தின் கரையில் அமர்ந்தான். வயிறு பசிக்கிறது. மனதினில் சோகம்... ஏக்கம். விதியினை நொந்து கொண்டான். குளக்கரையில் ஒரு ஆலய கோபுரம் கண்ணில் பட்டது. பசி மீறிய நிலையில், கோபுரத்தின் உச்சியைக் கண்டு "இறைவா ... நீ இருப்பது உண்மையானால், என்னை ஏனப்பா இப்படி ஒரு இழி பிறவி கொள்ளச் செய்தாய்" ... என மனம் உருகி கதறினான்.

குளத்து நீரை கையில் எடுத்து, அருந்திவிட்டு, படியில் சோர்வாக அமர்ந்தான். அன்னதானம் கொடுத்து முடித்த அரசர் பெருமான், அந்த படித்துறையில் காலாற நடந்து வந்தார். தனியாக ஒரு பிச்சைக்காரன் இருப்பதைக் கண்டு "என்னப்பா .... சாப்பிட்டாயா? " என்று ஒரு பத்தடி தூரத்திலிருந்து கேட்டார். கேட்பது ராஜா என்று தெரியாமல் "ஊரே சாப்பிட்டது; என் தலைவிதி இன்று பட்டினிதான்.... என விரக்தியாக, முகத்தை திருப்பாமல் குளத்து நீரை பார்த்தபடியே பதில் சொன்னான்."

மனம் வருந்திய மன்னர், என் பிறந்த நாளில் யாரும் பசியுடன் உறங்கச் செல்லக் கூடாது என்று தானே அன்னதானம் ஏற்பாடு செய்தோம்? என்று நினைத்து அருகே சென்று அவன் தோளில் கை வைத்து, "மன்னித்து விடப்பா. ரொம்ப பசிக்கிறதா? உணவு கிடைக்கவில்லையா உனக்கு?" என்று கேட்டார்.

மன்னரின் கிரீடம், காதில் குண்டலம், நெற்றியில் திலகம், இவை கம்பீரமாக குளத்து நீரில் தெரிந்தன. அதிர்ந்து போன பிச்சைக்காரன் பயத்தில், "மன்னா, பசி மயக்கத்தில், திரும்பி பாராமல் பேசிவிட்டேன்.... மன்னிக்க வேண்டும்" என்று பதறினான். மன்னன் முகமலர்ந்து சிரித்தார். "பயம் வேண்டாம். இன்று நீ என்னோடு அரண்மனையில் விருந்து உண்ணலாம்" என்று அவனை, தேரில் ஏற்றிக் கொண்டு அரண்மனைக்கு விரைந்தார். ஸ்நானம் செய்ய வைத்து, புத்தாடைகள் அளித்து அறுசுவை விருந்தும் கொடுத்தார். இறுதியில், பொற்காசுகள் நிறைந்த பட்டுப்பை ஒன்றினை அளித்தார். இனி, நீ ஏழை இல்லை. இந்த பொற்காசுகளை வைத்து நீ விரும்பும் தொழிலை செய்து கௌரவமாக நேர்மையாக வாழலாம்" என அறிவுரை வழங்கி வழி அனுப்பி வைத்தார்..

வியப்பில் மூழ்கிய, பிச்சைக்காரன் கண்களில் கண்ணீர் வழிந்தது. 'ஏன் அழுகிறாய்? ' என்று மன்னன் கேட்க. "மன்னா, இது நாள் வரை இறைவனிடம் நம்பிக்கை கொள்ளாத நான், பிறவி ஏழை என்றே நினைத்திருந்தேன். இன்று தான் முதல் முறையாக ஆலய கோபுரத்தை பார்த்து என்னை ஏன் இப்படி வைத்திருக்கிறாய் என்று ஆண்டவனிடம் கேட்டேன். ஆண்டவனை அழைத்த சில நிமிடங்களில், தங்களை அனுப்பி என் தலையெழுத்தையே மாற்றி விட்டான்...." என்று புலம்பி மேலும் கண்ணீர் உகுத்தான்.



நேர்மையாக வாழ்ந்து, நம்மை படைத்த இறைவனை நினைத்து சரணாகதி அடைந்தால், நம்மை கைவிடவே மாட்டான். நம்புங்கள் இறைவனை! நாடுங்கள் மனம் உருகி நல்லதே நடக்கும். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று சும்மாவா சொன்னார்கள்?



# சிறந்த சிறுவன்

## செல்வன் : ஐ.ஸ்ரீசரன்

பிறந்த தேதி - 17-09-2011.
தந்தை பெயர் - திரு. ஜனார்தனன்.
தாய் பெயர் - திருமதி ரம்யா ஜனார்தனன்.
பள்ளி - மாடர்ன் மேனிலைப்பள்ளி, சென்னை.

**பெற்ற பரிசுகள் :**

- ஹயக்ரீவர் கலை மற்றும் கவிதை அகாடமி காட்டுப்பாக்கம் - இசைப் போட்டி முதல் பரிசு, தமிழ் பேச்சுப்போட்டி - 3ம் பரிசு.
- ஏ.டி. கைவினைப் பொருள் சூப்பர் ஹீரோஸ் 2020 - தெய்வீக பாடல் போட்டி முதல் பரிசு
- ரோட்டரி கிளப், ஆதம்பாக்கம் - வேங்கடேஸ ஸ்தோத்ரம் சுலோகப் போட்டி முதல் பரிசு.
- லோட்டஸ் ட்ரஸ்ட், சென்னை - தேசபக்தி பாடல் போட்டி முதல் பரிசு.
- பர்ப்பின் விங்கீஸ், சென்னை - பகவத்கீதை ஒப்புவித்தல் போட்டி முதல் பரிசு.
- ஆல்ஃபா டான்ஸ் ஸ்டூடியோ - பஜனை பாடல் போட்டி இரண்டாம் பரிசு.
- ஸ்மார்ட் சூப்பர் ஸ்டார்ஸ் 2020-ஆங்கில குறுக்கெழுத்துப் போட்டி முதல் பரிசு, கிருஷ்ண ஜெயந்தி பாட்டுப் போட்டி முதல் பரிசு
- வேலியண்ட் அகாடமி, அசோக் நகர் - பாட்டுப் போட்டி முதல் பரிசு
- எக்ஸெக்டிஸ் சொல்யூஷன் லிமிடெட், நுங்கம்பாக்கம் - மிகச் சிறந்த பாடகர் விருது.
- ஆர்ட் ட்ரீம்ஸ் எக்ஸ்பிரஸ் ஸ்டூடியோ, சென்னை - பக்திப் பாடல் போட்டி முதல் பரிசு.
- ஸான் அகாடமி பள்ளி, திருப்பாவை போட்டி முதல் பரிசு.

புதிர்

# "வினா-விடை"

1. சோழ நாட்டில் அவதரித்த ஆழ்வார் யார்?

   அ) திருப்பாணாழ்வார் ஆ)குலசேகர ஆழ்வார்

   இ) மதுரகவியாழ்வார் ஈ) பெரியாழ்வார்

2. நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழி எந்த வேதத்தின் சாரமாக அமைந்துள்ளது?

   அ) ரிக் வேதம் ஆ)சாம வேதம்

   இ) யசூர் வேதம் ஈ) அதர்வண வேதம்

3. யோக நரசிம்மர் என்னும் திருநாமத்துடன் பெருமாள் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?

   அ) திருவள்ளூர் ஆ)திருநின்றவூர்

   இ) திருவல்லிக்கேணி ஈ) திருக்கடிகை

4. ஒரு பாசுரத்தால் மட்டும் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்கள் எத்தனை?

   அ) 10 ஆ)19 இ) 14 ஈ) 25

5. ஸ்ரீராமநுஜரிடம் திருக்கோளூர் பெண்பிள்ளை கூறிய வாக்கியங்கள் எத்தனை?

   அ) 78 ஆ)79 இ)80 ஈ) 81

6) கிருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு கொண்ட ஆழ்வார் யார்?

   அ) பெரியாழ்வார் ஆ)குலசேகராழ்வார்

   இ) மதுரகவியாழ்வார் ஈ) திருப்பாணாழ்வார்

7) பேயாழ்வார் அவதரித்த மாதம் எது?

   அ) சித்திரை ஆ)ஆனி


   இ) ஐப்பசி ஈ) கார்த்திகை

திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.

1) அ, 2) ஆ, 3) ஈ, 4) இ, 5) ஈ, 6) அ, 7) இ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...



தந்தநாந அஹி - தந்தநாந புரே தந்தநாந பளா - தந்தநாந...

- அன்னமய்யா

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 25-08-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742,
Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020



விநரோ பாக்யமு விஷ்ணுகத
வெநுபலமிதிவோ விஷ்ணுகத

- அன்னமய்யா